Regeistered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAN மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 03 (18-11-98) வியாழக்கிழமை ஒசை 278

## தமிழீழ மீட்புநிதிக் கடன் 1200 பேருக்கு மீளளிப்பு

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்து இருநூறு பேருக்கு 1993 மாவீரர் வாரத்தில் தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிக்கப்படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி அறிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான பங்களிப்பாக தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்தில் பங்கேற்றவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1200 பேருக்கு இம் மீட்புநிதிக் கடன் மீளளிக்கப்படவுள்ளது. இம் மீளளிப்புக்கென தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஒரு பகுதியினரின் விபரங்கள் மூன்றாம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## பூநகரியில் ஏற்பட்ட பேரிழப்பு

# அரசு மூடிமறைக்க முயல்வதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

## ராணுவத்திற்கு வசதி போதாதாம்

(கொழும்பு)

**பூநகரியில் ஆயிரம் இராணுவத்தினர் இறந்துவிட்டது உலகம் முழுவதும் தெரிந்துவிட்டது. ஆனால் உள்நாட்டில் எதுவும் தெரியாது மறைப்பதற்கு அரசாங்கம் முயன்று வருவதாக எதிர்க் கட்சிகள் பாராளு மன்றத்தில் அரசுமீது குற்றம் சாட்டின. அத்தோடு விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடும் படையினருக்குப் போதிய வசதி செய்து கொடுக்க அரசாங்கம் தவறிவிட்டதாகவும் அவை தெரிவித்தன.**

பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ,

பூநகரியில ஆயிரம் இராணுவத்தினர் இறந்து விட்டது உலகம் முழுவதும் தெரிந்து விட்டது ஆனால் உள்நாட்டில் எதுவும் தெரியாது அரசாங்கத்தால் மறைக்கப்படுவதாக குற்றஞ் சாட்டினார்.

மேலும் அவர் பேசுகையில் பி.பி.ஸி பூநகரித் தாக்குதலை உலகம்முழுவதும் காட்டுகிறது ஆனால் இலங்கையில் பி.பி.ஸி தொலைக்காட்சி செய்தி தணிக்கை செய்யப்படுகிறது ஆயிரத்திற்கு மேல் படையினர் பூநகரியில் கொல்லப்பட்டு விட்டனர் உலகம் முழுவதற்கும் இது தெரிந்து விட்டது ஆனால் உள்நாட்டில் செய்தி மறைக்கப்படுகிறது என்றார்.

புலிகளை எதிர்த்துபோரிட படையினருக்கு போதிய வசதி இல்லை நுளம்புகளை விரட்டக்கூட அவர்களுக்கு நுளம்

# காயமுற்ற படையினரை உறவினர் சந்திக்கத் தடை!

### இழப்பு வெளிவருவதைத் தடுக்க முயற்சி

(கொழும்பு)

றாக இம் முகாமில் தாக்கு

ரிகையாளர் பனாலி விமானப்



பூநகரி முகாம் தகர்ப்பின்போது புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட ரி-55 ரக டாங்கி.

கிழக்கு மாகாணம் - வவுனியா நகர

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனு கோரல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும், வவுனியா நகர சபைக்கும் அடுத்த மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

டிசம்பர் முதலாம் திகதி முதல் எட்டாம் திகதி நண்பகல் பன்னிரண்டு மணிவரை தேர்தல் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள தேர்தல் அலுவலகங்களில் மேற்படி வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்புமாநகரசபை, அம்பாறை, திருக்கோணமலை வவுனியா நகர சபைகள் மற்றும் மட்டக்களப்பிலுள்ள பதினொரு பிரதேச சபைகள், அம்பாறை மாவட்டத்தில்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## தவறாது சமூகந்தரவும்

சகல வீடியோப படப்பிடிப்பாளர்கள், ஓடியோ, வீடியோ பதிவாளர்கள் விநியோகத்தர்கள் அனைவரையும் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகம் கோண்டா

( 3 ஆம் பக்கம் பார்க்க )

(கொழும்பு)

**பூநகரியில் ஆயிரம் இராணுவத்தினர் இறந்துவிட்டது உலகம் முழுவதும் தெரிந்துவிட்டது. ஆனால் உள்நாட்டில் எதுவும் தெரியாது மறைப்பதற்கு அரசாங்கம் முயன்று வருவதாக எதிர்க் கட்சிகள் பாராளு மன்றத்தில் அரசபீது குற்றம் சாட்டின. அத்தோடு விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போசிடும் படையினருக்குப் போதிய வசதி செய்து கொடுக்க அரசாங்கம் தவறிவிட்டதாகவும் அவை தெரிவித்தன.**

பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொ டு பேசிய சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ,

பூநகரியில ஆயிரம் இராணுவத்தினர் இறந்து விட்டது உலகம் முழுவதும் தெரிந்து விட்டது ஆனால் உள்நாட்டில் எதுவும் தெரியாது அரசாங்கத்தால் மறைக்கப்படுவதாக குற்றஞ் சாட்டினார்.

மேலும் அவர் பேசுகையில் பி.பி ஸிபூநகரிதாக்குதலைஉலகம்முழுவதும் காட்டுகிறது ஆனால் இலங்கையில் பி பி ஸி தொலைக்காட்சி செய்தி தணிக்கை செய்யப்படுகிறது ஆயிரத்திற்கு மேல் படையினர் பூநகரியில் கொல்லப்பட்டு விட்டனர் உலகம் முழுவதற்கும் இது தெரிந்து விட்டது ஆனால் உள்நாட்டில் செய்தி மறைக்கப்படுகிறது என்றார்.

புலிகளை எதிர்த்துபோரிட படையினருக்கு போதியவசதி இல்லை நுளம்புகளை விரட்டக் கூட அவர்களுக்கு நுளம் புத்திரி வழங்கப்படுவதில்லை இந்த யுத்தம் வெற்றிபெற

( 3ஆம் பக்கம் பார்க்க)

# காயமுற்ற படையினரை உறவினர் சந்திக்கத் தடை!

## இழப்பு வெளிவருவதைத் தடுக்க முயற்சி

(கொழும்பு)

பூநகரி - நாகதேவன்துறை இராணுவ கடற்படை கூட்டுத் தளம்மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் உயிர் தப்பிய, காயமடைந்த படையினரைச் சந்திப்பதற்கு உறவினருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பை மூடிமறைக்கவே இவ்வாறு இராணுவ அதிகாரிகள் தடுத்துவருவதாக கொழும்பில் தெரிவிக்கப்படுகிறது

தாக்குதலில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான விபரங்கள் வெளிவராது இருப்பதற்காக இம்முகாமில் தாக்குதலின் போது உயிர்தப்பிய படையினரை எவரும் சந்தித்து விடாதபடி தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

இதற்காக உயிர் தப்பிய படையினரின் விபரங்களை வெளியிட்டுவரும் இராணுவ உயரதிகாரிகள் அவர்களை கொழும்பிற்கு கொண்டு சென்று உறவினர்களுக்கு காண்பிக்க மறுத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

பூநகரி முகாம்பகுதியை காண்பிப்பதற்கென அழைத்து வரப்பட்ட கொழும்பு பத்திரிகையாளர் பலாலி விமானப் படைத் தளத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டமை தெரிந்ததே.

# இராணுவம் வெற்றிபெற தியாகம்செய்யத் தயார்

## சுதந்திரக் கட்சி எம். பி

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவம் வெற்றிபெற வசதிகளை தியாகம் செய்ய நாம் தயார் என சுதந்திரக் கட்சி எம் பி. ஹேமகுமார பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது: எமது வாகனங்கள் வேண்டுமா? சம்பளங்கள் வேண்டுமா? தருகிறோம். பாராளுமன்றத்தில் எமக்கு தரப்பட்ட அத்தனை வசதிகளையும் தரத்தயார்.

பூநகரி பேரிழப்பு ஜனகபுர பேரிழப்பைத் தொடர்ந்து நிகழ்ந்துள்ளது. 1000க்குமேற் பட்டோர் உயிரிழந்துள்ளனர். எமதுஇராணுவம் புலிகளுடன் போராடும்போது நாம் கிரிக்கெட்ஆடுகின்றோம் காணிவேல் நடத்துகின்றோம் யுத்த காலத்தில் பிரிட்டன் பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில் படைவீரர்கள் உண்ணும் உணவையே உண்டார் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

# ஆயுதக் கொள்வனவிற்கு நிதி ஒதுக்கீடு போதாது!

## திஸ்ஸநாயக்கா பிரஸ்தாபிப்பு

இராணுவத்திற்கு வேண்டிய டாங்கிகள், ஹெலிக்கொப்டர்கள் வாங்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லையே என சுதந்திரக்கட்சி எம். பி எஸ். பி திஸ்ஸநாயக்கா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

வடக்கில் புலிகள் இராணுவத்தின் இரு டாங்கிகளை எடுத்துச் சென்றுவிட்டனர். இராணுவத்திற்கு வேண்டிய டாங்கி, ஹெலிகொப்டர்கள், மற்றும் ஆயுதங்களைக் கொள்வனவுசெய்ய போதிய நிதி இம்முறை பட்ஜட்டில் ஒதுக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

# நாகதேவன்துறையை புனரமைக்க முயற்சியாம்

(கொழும்பு)

பூநகரியில் இராணுவ முகாமையும் கடற்படைத் தளத்தையும் விடுதலைப் புலிகள் அழித்து விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து நாகதேவன் துறையை புனரமைக்கும் முயற்சியில் சிறிலங்கா படையினர் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முதலில் இத்துறைமுகத்தைப்புனரமைக்க முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் புலிகளின் கண்ணிவெடிகள், மிதிவெடிகள், பொறிவெடிகள் என்பவற்றை அகற்றி முன்னேற வேண்டியுள்ளதால் மெதுவாகவே படையினர் செல்லவேண்டியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

புலிகள் அப்பகுதியை விட்டு வெளியேறிய போதிலும் இறியதாக்குதல்களை நடாத்தி வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இராணுவத்தினரை எவரும் விமர்சிக்கக் கூடாது -ரணில்

(கொழும்பு)

யுத்தத்தின் முதல்கட்டமே முடிவடைந்துள்ளது. மேலதிக படையினர் முன்னேறி வருகின்றனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். புலிகள் பூநகரியில் நடத்திய தாக்குதலில் எமது தரப்பில் பல உயிர்கள் பலியாகின. ஆயுதங்களையும் இழந்தோம். ஆனால் வதந்திகள் பரவுவது போல் பூநகரி முகாம்களை நாம் இழக்கவில்லை. பூநகரியில் மேலதிகப்படைகள் முன்னேறுகின்றன எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார், ஐ தே. க செயற்குழு கூட்டத்தில் அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது ஒரு முக்கியமான கட்டம் நாம் அனைவரும் இராணுவத்தை விமர்சிக்கக் கூடாது நாம் ஒன்றுபட்டு இராணுவத்தை ஊக்குவிக்க வேண்டும். யாரும் பதற்றமடையக் கூடாது அரசை திட்டுவதை நிறுத்தி இராணுவத்தை ஊக்குவிக்க வேண்டும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )



பூநகரி முகாம் தகர்ப்பின்போது புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட ரி-55 ரக டாங்கி.



பூநகரி முகாமைத் தகர்த்த பின்னர் அங்கிருந்த கனரக ஆயுதமொன்றை போராளி ஒருவர் எடுத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# குண்டு வீச்சை கண்டித்து ஜனாதிபதிக்கு-ஆயர் கடிதம்

## இலக்குத் தவறிய தாக்குதல் அல்ல

இருபது மைல்களுக்கு அப்பால் பூநகரியில் நடந்ததற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே புனித யாகப்பர் ஆலயம் மீது குண்டு வீசப்பட்டது என்று நாம் முடிவு செய்ய வேண்டியுள்ளது. ஆலயம் மற்றும் ஆலயத்தைச் சுற்றியுள்ள கட்டடங்கள் மீது குறிவைத்து நேரடியாகவே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புனித யாகப்பர் ஆலயம்மூன்று குவிந்த பெரிய கோபுரங்களோடு கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. சாதாரண கண் பார்வை உள்ள எந்த விமான மோட்டியின் பார்வைக்கும் பல மைல்களுக்கு அப்பால் இருக்கும்போதே இந்தப்புனித ஸ்தலம் கண்ணில் பட்டிருக்க வேண்டும். குண்டு வீச்சை இலக்குத் தவறிய தாக்குதல் என்றும் சொல்ல முடியாது. அயலில் புலிகள் முகாமோ வேறுசந்தேகத்துக்கு இடமான நடவடிக்கையோ இல்லை.

இவ்வாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்எஸ்.தொண்ட

( 3 ஆம் பககம் பார்க்க )

## வரி விளம்பரம்

### வேலை வாய்ப்பு

சைனீஸ் உணவகத்திற்கு உணவு பரிமாறுவதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள் 18-11-93 19-11 93 திகதிகளில் காலை 10 00மணி முதல் 12.00 மணி வரை நேரில் சமுகம் தரவும். நியூ யாழ் சைனீஸ் 124, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (6611)

### கால்நடை மருந்துகள் விற்பனைக்குண்டு

மேற்படி மருந்து வகைகள் தேவைப்படுவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி கிழக்கு. (சி-7951)

### தவறிவிட்டது

15.11 93 அன்று கோப்பாய் சந்தியில் ஈஸ்வரபாலன் வசந்தா என்பவருடைய அடையாள அட்டையும், [ 688652286v ] சிறு தொகைப்பணமும் ரயில்வே அட்டையும் [ 7677 ] தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் நா. இராசா, சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6616)

### மா இறக்கும் வேலை ஆரம்பம்

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் தரித்து நின்ற 'வாதுவ' கப்பல் நேற்று காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தது. இக்கப்பல் வந்ததையடுத்து மா இறக்கும் வேலைகள் ஆரம்பமாகியது அதேசமயம் இத்துறைமுகத்தில் தரித்து நின்று பொருள்களை இறக்கி முடித்த 'குமண' கப்பல் நேற்று பிற்பகல் கொழும்பு நோக்கிப்புறப்பட்டது 'குமாரி' கப்பல் அநேகமாக 20 ஆம் திகதி வந்து சேருமென எதிர் பார்க்கப்படுகிறது, (யோ)

## இலங்கை வானொலியும் லங்கா 'சுவான்விதுலி' ஆகுமா?

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தால் வெளியிடப்பட்டு வரும் வானொலி மஞ்சரியின் பெயர் இப்போது ''சிரவ்யவாகினி'' என்று மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் 52 பக்கங்களை கொண்ட இச் சஞ்சிகையின் 8 பக்கங்கள் மட்டுமே தமிழ் மொழிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன் அதிலும் 2பக்கங்களில் தமிழ் மொழிமூல கட்டுரை ஒன்று கவிதை ஒன்று தவிர ஏனைய ஆறு பக்கங்களும் தமிழ்மொழிமூல விளம்பரங்களாகவே' உள்ளன.

## 8-ம் நாள் நினைவு

## மேஜர் குமரேஸ் (குமரவேல்)

(மைக்கல் அன்ரனி)

அன்னை மடியில் பிறப்பு: 25- 08- 1973

ஈழமண்ணில் விதைப்பு: 11- 11- 1993

பூநகரி முகாம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்த எமதுசெல்வம் மேஜர் குமரேசுக்கும் அவருடன் இணைந்து வீரகாவியம் படைத்த ஏனைய வீரவேங்கைகளுக்கும் எம் இதய அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம்

மேஜர் குமரேஸின் இல்லத்தில் இன்று (18. 11. 93) வழங்கப்படும் மதிய போசனத்தில் அனைத்து போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

தகவல்:-

43A, மொறிஸ் லேன்,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

மைக்கல் குடும்பம்

(6613)

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி



எமது தமிழ் ஆசிரியர் நா. குழந்தைவேலு அவர்களின் செல்வப்புதல்வன்

## 2-ம் லெப். சிவகுமாரன்

(குழந்தைவேலு சத்தியேந்திரா [பவா] )

வீரச்சாவடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
93 A/L கலைப்பிரிவு மாணவர்கள்
நிரு ரியூசன் சென்ரர்.

(6612)

## கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தலைவர்
திரு. வே.எட்வேட் அவர்களின் புதல்வன்

## 2-ம் லெப். கார்வர்ணன்

[எட்வேட் தேவாநந்]

பூநகரி முகாம் தகர்ப்பில் 11- 11- 1993இல் வீரச்சாவடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.

பெரியவிளான் உதயசூரியன் ச.ச. நிலைய
நிர்வாகிகளும், அங்கத்தவர்களும்

(6620)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16- 07- 1948
மறைவு
11- 11- 1991



## நாகலிங்கம் சிவகுருநாதன்

இரண்டாண்டு அப்பா எங்களை மறந்தாண்டாய் போனது
தஞ்சம் இல்லை தனிமையிலே வாடுகிறோம்
நெஞ்சினிலே அமைதியில்லை தினம் அவல நிலை
அன்புடனே எமை வளர்த்து ஆளாக்க ஆசைப்பட்ட அப்பாவே

உங்கள் ஆத்மா ஆறுதலாக சாந்தி கொள்க
தப்பாமல் தங்கள் வழி சென்றிடுவோம்
என்றும் வாழ்வை வென்றிடுவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

16, நெடுங்குளம், வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(6615)

## கண்ணீர் அஞ்சலி

பூநகரியில் நடந்த வரலாற்றுச் சமரில் வீரகாவியம் படைதத எமது கல்லூரி பழைய மாணவர்களான,

## 2-ம் லெப். ஈழவேந்தன்

(செல்லையா சுந்தர்ராஜன்)

## வீரவேங்கை நாராயணன்

(சிவநாயகம் சிவமோகன்)

ஆகியோருக்கும், இவர்களுடன் வீரகாவியம் படைத்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உயர்தர மாணவர்கள் 1993
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(6617)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-11-18

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் கட்டப்பராயில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 07 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு அம்பாறை, ஆலடி, வேம்படிப் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **தருமன்** (செம்பாப்போடி - தருமலிங்கம் - அக்கரைப் பற்று - அம்பாறை)

1988ஆம் ஆண்டு யாழ் - நல்லூர்ப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**இளங்கோ** ( — - இல. 04, விதானையார் வீதி - கண்டிக்குளி - யாழ்)

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - தண்ணீரூற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் சுட்டதில் வீரச்சாவெய்திய-

**மேஜர் தங்கேஸ்** (செபஸ்ரியாம்பிள்ளை மங்களதாஸ்- சிலாவத்தை - முல்லைத்தீவு)

1990 ஆம் ஆண்டு மன்னார்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்டசமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ஸ்ரனி** (ஜேம்ஸ் அன்ரனி - பனங்கட்டிக் கொட்டு - மன்னார்)

இதேதினத்தில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த-

**சன்** (ம. அன்ரனி சேவியர் (குட்டி) - இத்திக்கண்டல், அடம்பன் - மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/7948)

# வீர அஞ்சலி

த்துறை துறைமுகத்திற்கு வந்தது. இக்கப்பல் வந்ததையடுத்து மா இறக்கும் வேலைகள் ஆரம்பமாகியது அதேசமயம் இத்துறைமுகத்தில் தரித்து நின்று பொருள்களை இறக்கி முடித்த 'குமண' கப்பல் நேற்று பிற்பகல் கொழும்பு நோக்கிப்புறப்பட்டது 'குமாரி' கப்பல் அநேகமாக 20 ஆம் திகதி வந்து சேருமென எதிர் பார்க்கப்படுகிறது. (யோ)


எமது தமிழ் ஆசிரியர் நா. குழந்தைவேலு அவர்களின் செல்வப்புதல்வன்

**2-ம் லெப். சிவகுமாரன்**

**(குழந்தைவேலு சத்தியேந்திரா [பவா])**

வீரச்சாவடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
93 A/L கலைப்பிரிவு மாணவர்கள்
நிரு ரியூசன் சென்ரர்.

(6612)



அப்பாவே

உங்கள் ஆத்மா ஆறுதலாக சாந்தி கொள்க
தப்பாமல் தங்கள் வழி சென்றிடுவோம்
என்றும் வாழ்வை வென்றிடுவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

16, நெடுங்குளம், வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(6615)



ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/7948)



# வீர அஞ்சலி



தென்மராட்சி விசேட தளபதி

## மேஜர் குணா

**(சுந்தரம் விஜயராசா, கல்வயல்)**

**கடந்த 11. 11. 1993 அன்று பூநகரி இராணுவ முகாம் அழிப்பில் (ஒபரேசன் தவளை) தன்னை ஆகுதி ஆக்கிக்கொண்டவர்**

**அன்னை மடியில்: 28 - 11 - 1963**

**அன்னைத் தமிழுக்காய்: 11 - 11 - 1993**

பூநகரி முகாம்கள் பொடிபட்டுப் போயழிய
ஈனம் புரிந்திட்ட இன அரக்கர் சாய்ந்துவிழ
வீரம் விளைத்திட்டு விதையான வேங்கைகளே!
மான மறக்குலத்தின் மாவீரத் திலகங்களே...

ஈழம் பிறக்கும் உங்கள் நினைவு நிற்கும்
காலம் காலமாய் உமைவணங்கும் மனமிருக்கும்
நாளும் பொழுதுமாய்நீர் சமைத்த வழிகளிலே
வாழும் எம்மினத்தின் தடம்பதியும் வணங்குகிறோம்

**அனைத்து மாவீரர்களுக்கும் நாம் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகிறோம்.**

[5072]

**கைத்தொழில் வர்த்தகர் சங்கம் சாவகச்சேரி.**

### சிந்தனைக்கு

தவறு செய்வதில் தொடர்ந்து முனைவது தவறுக்கு சமாதானம் ஆகாது: தவறின் சுமையை மேலும் கனமாக்கும்.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05


## ஆச்சரியமானது அல்ல

தெளிவற்ற ஓர் அறிக்கையுடன் தெரிவுக்குழு தனது இறுதி மூச்சை விட்டுள்ளது. தமிழருக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று மட்டும் தெரிவித்துள்ள தெரிவுக்குழு அவை எவை என்றோ, அன்றி யுத்தத்தை நிறுத்துவதற்கான வழிவகைகள் எதையுமோ கூறவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தெரிவுக் குழுத் தீர்வு எதையும் கொண்டுவரப்போவதில்லை என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதொன்றுதான். இது தொடர்பாக பல தடவை இதே பகுதியில் எழுதப்பட்டும் இருந்தது. ஆனால் தற்பொழுது முன்னர் கூறியதை ஏற்க மறுத்தவர்களுக்கும், உலகிற்கும் தெரிவுக்குழு தனது நிலையை தெளிவாக வெளிக்காட்டியுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவின் அமைப்பு முறையே இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதையும் கொண்டுவரக் கூடியதாக இருக்கவில்லை. அதாவது பாராளுமன்றத் தெரிவுக்குழுவானது. பெரும்பாலும் பாராளுமன்றத்தில் கட்சிகளின் நிலைக்கு ஏற்பவே அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. இந்நிலையில், இக்குழு நியமிக்கப்பட்டதில் அர்த்தம் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், எப்பொழுதும் ஒரு பிரச்சினைத் தீர்விற்கு பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்கள் சம அந்தஸ்தில் சம அளவில் பேசுவதன் மூலமே பிரச்சினைக்குத்தீர்வு காண முடியும். ஆனால், தெரிவுக்குழுவும் முழுமையாக பாராளுமன்றத்தைப் போன்றே சிங்களவரின் முழுமையான ஆதிக்கம் கொண்டதாகவே இருந்தது.

மேலும், தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை வழி நடத்திச் செல்லும் விடுதலைப்புலிகள் தெரிவுக்குழுவில் இடம் பெற்றிருக்கவில்லை. இது வழக்காளி இன்றி விசாரணை நடத்துவது போன்றதொன்றாகும். இந்நிலையில் தெரிவுக்குழுவிடம் இருந்து தமிழ் மக்கள் ஏற்புடைய தீர்வுத்திட்டம் ஒன்று உருவாக முடியாது என்பது ஆரம்பத்திலேயே தெளிவாகியதொன்றாகவே இருந்தது.

அத்தோடு, ஆரம்பத்தில் தெரிவுக்குழுவில் பங்கு

# புதுக்குடியிருப்பில் குண்டுத்தாக்கு

## சிறுமி உட்பட மூவர் காயம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுப் பகல் வட்டமிட்ட இரு சியாமாசிட்டி விமானங்கள் இரணைடபாலை பகுதியில் நான்கு குண்டுகளைவீசியதில் மூவர் காயமடைந்தனர்.

பகல் 11.35 மணியளவில் இக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றன. இரு குண்டுகள் வெடிக்காத நிலையில் புதைந்திருக்கின்றன.

இத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு; ம. புஷ்பமலர் (06) அ. மரியராஜேஸ்வரி (48). அ. அருள்மாலா (19). இவர்கள் அனைவரும் உடனடிச் சிகிச்சைக்காகபுதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே சமயம் அலம்பில், பேராவில் பகுதியிலும் நேற்றுக் காலை 8 30 மணியளவில் விமானக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் இதன் சேத விபரங்கள் தெரியவரவில்லை.

### யாழ் செயலகத்தில் ஏற்பட்ட

## குண்டுவீச்சு சேதம் பற்றி மதிப்பீடு ஆரம்பம்

சிறிலங்கா விமானப்படையின் சுப்பர்சொனிக் போர் விமானம் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த யாழ் செயலக கட்டடத்தை திருத்துவதற்கான மதிப்பீட்டினை நிர்மாணத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

மேற்படி திணைக்களத்திடம் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேட்டுக்கொண்டதை அடுத்தே திருத்துவதற்கான மதிப்பீட்டு வேலையில் நிர்மாணத்திணைக்களம்ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செயலகம் தனியார் கட்டடங்களில் இயங்கினால் நிர்வாக ஒழுங்குகளை பரவலாக நடத்துவதில் பெரும் சிரம மேற்படுமெனவும் அதனால் மீண்டும் பழைய இடத்திலேயே செயலகத்தை இயக்குவதற்கு வசதியாக செயலக கட்டட திருத்தவேலைக்கு தேவையான பொருள்கள் மற்றும் மதிப்பீட்டினை செய்து தரும்படியும் தான் கொழும்பில் இருந்து உடனடியாக அவற்றை எடுத்து தருவதாக அரசாங்க அதிபர் நிர்மாணத் திணைக்களத்திடம் தெரிவித்ததாக தெரிய வருகின்றது.

அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளர் விநாயகரட்ணம் அவர்களின் தலைமையில் நிறைவேற்றுபொறியியலாளர் சுந்தரகுமார் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களை கொண்ட குழு ஒன்று நேற்று முன்தினம்முதல்செயலக கட்டடத்தின்திருத்த வேலை மதிப்பீட்டினை மேற்கொண்டு வருகின்றது. (சி),(ச)

## வயோதிபர் பலி

பருத்தித்துறையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் கொலரா நோயால் பீடிக்கப்பட்டிருந்து கடந்த திங்கள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மரணமானார்.

சஞ்சி - அருளப்பு (வயது54) பருத்தித்துறை மூன்றாம் குறுக்கைச் சேர்ந்தவரே இவ்வாறு மரணமானவராவார். இவர் இந்நோய்க்கு இலக்காகி சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த போதிலும் இறுதியில் மரணமானார்.

# மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

## மார்கழி - 1992

### நல்லூர்

01. யா. ந. 306
02. யா. ந. 312
03. யா. ந. 482
04. யா ந. 732
05. யா. ந. 1186
06. யா. ந. 1480
07. யா. ந. 1839
08. யா. ந. 2672
09. யா. ந. 3472
10. யா. ந. 4096

### யாழ்ப்பாணம்

01. யா. யா. 16
02. யா. யா. 281
03. யா. யா. 548
04. யா. யா. 843
05. யா. யா. 1420
06. யா. யா. 1921
07. யா. யா. 3588
08. யா. யா 4439
09. யா. யா. 4744
10. யா. யா. 4821

### கோப்பாய்

01. யா. கோ. 251
02. யா. கோ. 1261
03. யா. கோ. 1673
04. யா. கோ. 1726
05. யா. கோ. 1772
06. யா. கோ. 2128
07. யா. கோ. 2852
08. யா. கோ. 3900

### உடுவில்

01. யா. உ. 190
02. யா. உ 315
03. யா. உ. 882
04. யா. உ. 1467
05. யா. உ 2840

### மானிப்பாய்

01. யா. மா. 05
02. யா. மா. 1013
03. யா. மா. 1136
04. யா. மா. 1931
05. யா. மா. 2011
06. யா. மா. 3405

### தெல்லிப்பளை

01. யா. தெ. 68
02. யா. தெ. 141
03. யா. தெ 387
04. யா. தெ. 1325
05. யா. தெ. 1487
06. யா. தெ. 1790
07. யா. தெ. 3015
08. யா. தெ. 3185

### சங்கானை

01. யா. ச. 122
02. யா ச. 259
03. யா. ச. 497
04. யா. ச. 855
05. யா. ச. 981
06. யா. ச. 1330
07. யா. ச. 2354
08. யா. ச. 3608
09. யா. ச. 4033

### காரைநகர்

01. யா. கா. 214
02. யா. கா. 871

### வேலணை

01. யா. வே. 577
02. யா. வே. 640
03. யா. வே. 1210
04. யா. வே. 1355
05. யா. வே. 1418

### கரவெட்டி

01. யா. க. 87
02. யா. க. 88
03. யா. க. 97
04. யா. க. 315
05. யா. க. 327
06. யா. க 1685
07 யா. க. 2412
08. யா. க 2516
09. யா. க 3084
10. யா. க. 3130

### பருத்தித்துறை

01. யா. பரு. 957
02. யா. பரு. 1403
03. யா. பரு. 2163
04. யா. பரு. 2165
05. யா. பரு. 2460
06. யா. பரு. 2826
07. யா. பரு. 4252
08. யா. பரு. 4344

### வடமராட்சிகிழக்கு

01. யா. வ கி 156
02. யா. வ. கி. 202

### சாவகச்சேரி

01. யா. சா 463
02 யா. சா. 645
03. யா. சா. 774
04. யா. சா. 1265
05. யா. சா. 1458
06. யா. சா. 3400
07. யா. சா. 3735
08. யா. சா. 3745
09. யா. சா. 4116
10. யா. சா. 5122
11. யா. சா. 5426
12. யா. சா. 6467
13. யா. சா. 6626

### பச்சிலைப்பள்ளி

01. கி. ப. 362

### வெளியகல்வு

01. யா. வெ. 69
02 யா. வெ. 1341
03. யா. வெ. 1359

(தொடரும்)

### கண்டெடுப்பு

செல்வி சுகுணா கனகரத்தினம் என்பவரது தேசிய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

### இன்று முதல் திறக்கப்படலாம்

ஹஸ்ரத்பால் மசூதி இன்று முதல் பொது மக்களின் வழிபாட்டிற்காக திறந்து விடப்படும் என்று ஜம்மு காஷ்மீர் மாநில நிர்வாகம் அறிவித்துள்ளது.

### யாகப்பர் ஆலய குண்டுவீச்சு

# அரசாங்கம் மீது கண்டனம்

(நல்லூர்)

சுப்பர் சொனிக் விமானக் குண்டு வீச்சினால் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் சேதம் அடைந்தது தொடர்பாக அரசிற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் நோக்குடனும் கத்தோலிக்க சமூகத்தின் உணர்வைத் தட்டியெழுப்பும்

★ இம்மகஜரின் பிரதிகள் சிறிலங்காவின் ஜனாதிபதி, மந்திரிசபை ஏனைய அரச உயர் அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல்

★ வெளிநாட்டில் வாழும் குருநகர் மக்கள் மூலம் வெளிநாட்டு அரசுகளுக்கு ஆலயச் சேதம் தொடர்பாக தெரியப்படுத்தல்.

# இந்தியாவை சீர்குலைக்க பாக். சதி செய்கின்றது

தீர்வு எதையும் கொண்டவைகள் கூடியதாக இருக்க வில்லை. அதாவது பாராளுமன்றத் தெரிவுக்குழுவானது பெரும்பாலும் பாராளுமன்றத்தில் கட்சிகளின் நிலைக்கு ஏற்பவே அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. இந் நிலையில், இக்குழு நியமிக்கப்பட்டதில் அர்த்தம் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், எப்பொழுதும் ஒரு பிரச்சினைத் தீர்விற்கு பிரச்சினையுடன் சம்பந்தப் பட்டவர்கள் சம அந்தஸ்தில் சம அளவில் பேசுவதன் மூலமே பிரச்சினைக்குத்தீர்வு காண முடியும். ஆனால், தெரிவுக்குழுவும் முழுமையாக பாராளுமன்றத்தைப் போன்றே சிங்களவரின் முழுமையான ஆதிக்கம் கொண்டதாகவே இருந்தது.

மேலும், தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை வழி நடத்திச் செல்லும் விடுதலைப்புலிகள் தெரிவுக்குழு வில் இடம் பெற்றிருக்கவில்லை. இது வழக்காளி இன்றி விசாரணை நடத்துவது போன்றதொன்றாகும். இந்நிலை யில் தெரிவுக்குழுவிடம் இருந்து தமிழ் மக்கள் ஏற் புடைய தீர்வுத்திட்டம் ஒன்று உருவாக முடியாது என்பது ஆரம்பத்திலேயே தெளிவாகியதொன்றாகவே இருந்தது.

அத்தோடு, ஆரம்பத்தில் தெரிவுக்குழுவில் பங்கு பற்றிய கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் இடையில் தெரிவுக்குழுவில் இருந்து விலகிக் கொண்டமை மேலும் அதனைப் பலவீனப்படுத்தியது. அதாவது பாராளுமன் றத் தெரிவுக்குழு முழுமையாகச் சிங்களத் தெரிவுக் குழுவாக மாறியது. இந்நிலையில், தெரிவுக்குழுவின் தீர்மானம் என்பது சிங்களப் பேரினவாதத்தின் தீர்மான மாகியது.

அதாவதுபிச்சையுடன் திருப்திப்படக் கூடிய கொழும் பில் தரித்துள்ள தமிழ்க்குழுக்களையே தெரிவுக்குழு வினால் திருப்திப்படுத்த முடியாத நிலையில் உரிமைக் காகவும், தமது பிரதேசத்தின் மீட்சிக்காகவும் போராடும் விடுதலைப்புலிகளும், அவர்களுக்குத் துணையாக நிற்கும் தமிழ் மக்களும் ஏற்கக் கூடிய தீர்வொன்றை அரசால் வைக்க முடியும் என எவ்வாறு எதிர்பார்க்கலாம்.

இதேவேளை, தெரிவுக்குழுவில் இருந்து, உருப்படி யான யோசனைகள் எதையும் எவரும் எதிர்பார்த்திருக் காதர்கள் என்பதை புதிய ஜனாதிபதி டி. பி. விஜே துங்காவின் அறிவிப்புக்களே தெளிவாக வெளிக்காட்டி வந்தன. அதாவது, இனப்பிரச்சினை என்ற ஒன்றே இலங்கையில் இல்லையென்ற அவரது அறிவிப்பும்,இப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்ற அவரது பிரகடனமும் தெரிவுக்குழுவின் சிபார்சுகள் எப்படி இருக்கும் என்பதை கட்டியம் கூறுபவையாகவே இருந்தன.

இதனால், தெரிவுக்குழுவின் இவ் அறிக்கையால் தமிழ் மக்கள் எவரும் ஏமாற்றமோ, விரக்தியோ அடைந் திருக்கப்போவதில்லை. கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் கூட இதனை ஓளவிற்குப் புரிந்திருக்கக்கூடும். ஆனால், அவர்களுக்குஏமாற்றமளிக்காது விட்டாலும் இது ஓரளவு கவலைதொடக்காமலும்இருக்கப்போவதில்லை.ஏனெனில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இவ் அறிக்கையானது அவர்களை அரசியல் துறவறம் பூணவேண்டிய நிர்ப் பந்தத்தை உருவாக்கியுள்ளது என்பதினாலாகும்.

இதேவேளை, தெரிவுக்குழு இவ்வாறாக தோல்வி யில் முடிந்துள்ளதினால், எதிர்காலத்தில் கவலைப்படப் போவது சிறிலங்கா அரசியல்வாதிகளாகவே இருப்பார் கள். அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் தவறவிட்டுள்ளார்கள். கடந்த காலத்தில் அவர்கள் விட்ட தவறுகளே இலங்கையில் இன்றைய நிலை உருவாவதற்கு காரணம் என்பதை அவர்கள் மறந்து விடுதல் கூடாது

---

வருவதாக தெரிவிக்கப்படுகி றது.

யாழ். செயலகம் தனியார் கட்டடங்களில் இயங்கினால் நிர்வாக ஒழுங்குகளை பரவலாக நடத்துவதில் பெரும் சிரம மேற்படுமெனவும் அதனால் மீண்டும் பழைய இடத்திலேயே செயலகத்தை இயக்குவதற்கு வசதியாக செயலக கட்டட திருத்தவேலைக்கு தேவையான பொருள்கள் மற்றும் மதிப்பீட்டினை செய்து தரும்படியும் தான் கொழும்பில் இருந்து உடனடியாக அவற்றை எடுத்து தருவதாக அரசாங்க அதிபர் நிர்மாணத்

---

## வயோதிபர் பலி

பருத்தித்துறையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் கொலரா நோயால் பீடிக்கப்பட்டிருந்து கடந்த திங்கள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மரணமானார்.

சஞ்சி -அருளப்பு (வயது54) பருத்தித்துறை மூன்றாம் குறுக்கைச் சேர்ந்தவரே இவ்வாறு மரணமானவராவார். இவர் இந்நோய்க்கு இலக்காகி சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த போதிலும் இறுதியில் மரணமானார்.

---

செல்வி கருணா கனகரத்தினம் என்பவரது தேசிய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## இன்று முதல் திறக்கப்படலாம்

ஹஸ்ரத்பால் மசூதி இன்று முதல் பொது மக்களின் வழிபாட்டிற்காக திறந்து விடப்படும் என்று ஜம்மு காஷ்மீர் மாநில நிர்வாகம் அறிவித்துள்ளது.

---

01. யா. க. 87
02. யா. க. 88
03. யா. க. 97

02. யா. வெ. 1311
03. யா. வெ. 1359

(தொடரும்)

---

# இந்தியாவை சீர்குலைக்க பாக். சதி செய்கின்றது

## — இந்திய-அமெரிக்க காஷ்மீர் மன்றம் தெரிவிப்பு

(டில்லி)

பாகிஸ்தானின் முப்படை உளவு அமைப்பான ஐ. எஸ். ஐ. வட மாநிலங்களான பஞ்சாப், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவி வருவதோடு வட கிழக்கு மாநிலங்களான அசாம், நாகலாந்து மணிப்பூர் மாநிலங்களிலும் தீவிரவாதிகளுக்கு பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கி வருவது கண்டறியப்பட்டிருப்பதாக இந்திய-அமெரிக்க காஷ்மீர் மன்றம் கூறியுள்ளது.

ஆப்கான் கிளர்ச்சியாளர்களுக்கும், பஞ்சாப், காஷ்மீர் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதில் இந்த உளவு அமைப்பு பெருமளவில் பங்கு வகித்ததாகவும் கூறப்படுகின்றது. வழக்கத்துக்கு மாறான போர்முறைகள் பற்றி ஆராயும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் குடியரசுக் கட்சியின் ஆராய்ச்சிக் குழு வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையை மேற்கோள் காட்டிய அமெரிக்க காஷ்மீர் மன்றம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஜமாய்த்தே இஸ்லாமி என்னும் அமைப்பு மூலமாக இந்திய இஸ்லாமிய மாணவர் அமைப்பினருடன் தொடர்பு ஏற்படுத்திய பாகிஸ்தானின் ஐ எஸ் ஐ. உளவுப் பிரிவினர் இந்தியாவில் சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான இளைஞர்களைத் தெரிவு செய்து பயிற்சி அளித்ததாகவும் கூறப்படுகின்றது. ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்ற இருநூறு பேர் 92ம் ஆண்டின் கோடை காலத்தில் காஷ்மீருக்குள் ஊடுருவி சீர்குலைவு நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கு பாகிஸ்தானின் ஐ எஸ் ஐ. பெருமுதவி புரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்து தூண்டி விடுவதன் மூலம் இந்தியாவிற்கு எதிராகப் பாகிஸ்தான் மறைமுக யுத்தம் ஒன்றை நடத்துவதாக இந்திய வெளியுறவு அமைச்சின் ஆலோசனைக் கமிட்டி குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்களுடனும் கூட பாகிஸ்தானின் ஐ. எஸ். ஐ. உளவு அமைப்பிற்குத் தொடர்பு இருப்பதாகவும், பம்பாய் நகரில் நடந்த குண்டு வெடிப்பைப் போல ஹைதராபாத் போன்ற பிற நகரங்களிலும் குண்டுகளை வெடிக்க வைப்பதன் மூலம் இந்திய மக்களிடையே பதற்றத்தையும், பீதியையும் ஏற்படுத்த முயற்சிகள் நடப்பதாகவும் கூறப்படுகின்றது.

---

### குண்டுவீச்சு

மான், சபாநாயகர் மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

புராதன புனித யாகப்பர் தேவாலயம் கொழும்பு அல்லது நீர்கொழும்பில் நீங்கள் பார்க்கும் எந்தக் கத்தோலிக்கத் தேவாலயத்தைப் பார்க்கிலும் சிறிதானதல்ல.

யாழ். நகரத்தைச் சுற்றிப் பறந்துகொண்டிருந்த சுப்பர் சொனிக் விமானங்கள் இரண்டில் ஒன்று. திடீரென்று தாழப் பறந்து வீசிய இரண்டு பாரிய குண்டுகள் ஆலயத்தின் பிரதான பகுதியை நேரடியாகத் தாக்கின. புனித வணக்கத் தலங்கள் மீது சிறிலங்கா விமானப் படை குண்டு வீசாது என்ற நம்பிக்கையுடன்வழமை போல் அங்கு தஞ்சமடைந்திருந்தனர் சாதாரண ஏழை மக்கள் குண்டு வீச்சுத் தாக்குதலினால் ஆலயம் இடிந்தது. இத் தாக்குதலில் பத்துப்பேர் கொல்லப்பட்டனர், முப்பதுக்கும் அதிகமானவர்கள் பாரிய காயப்பட்டனர். இவர்களில் வயோதிபப் பெண்களும், சிறார்களும், மற்றும் பெண்களும் வைத்தியசாலையில் இப்போதும் சிகிச்சை பெறுகிறார்கள் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்அறிக்கையில்50,மில்லியன் ரூபா செலவானாலும் இது போன்ற அழகான ஒரு பெரிய ஆலயத்தை வடிவமைத்து இன்று கட்ட முடியாது என்றும்,

பலரைக் கொன்றும், கட்டடங்களை அழித்ததுமான விமானப்படையின் இந்த நாசகாரச் செயலுக்கு அரசே பொறுப் பேற்கவேண்டும் இந்த மகஜரை எழுதிக்கொண்டிருந்த இதேவேளை, கிளிநொச்சியில் மற்றொரு தேவாலயம்-புனிததிரேசா தேவாலயமும். குருமனையும் குண்டு வீச்சினால் பாரதூரமான அழிவுகளுக்கு உட்பட்டதாக அறிகின்றேன் வேறு பல ஆலயங்களும், எமது ஆசனக் கோவிலும் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் தாக்கப்பட்டுள்ளன என்றும்,

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து புனித ஆலயங்கள் மீதும், மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீதும் விமானப் படை குண்டு வீசுவதை நிறுத்துமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது

---

### யாகப்பர் ஆலயகுண்டுவீச்சு

# அரசாங்கம் மீது கண்டனம்

(நல்லூர்)

சுப்பர் சொனிக் விமானக் குண்டு வீச்சினால் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் சேதம் அடைந்தது தொடர்பாக அரசிற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் நோக்குடனும் கத்தோலிக்க சமூகத்தின் உணர்வைத் தட்டியெழுப்பும் நோக்குடனும் நேற்றைய தினம் குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலில் ஆலயப் பங்குத்தந்தை எஸ். நேசநாயகம் அடிகளார் தலைமையில் மக்கள் எழுச்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. குருநகரைச் சேர்ந்த மக்கள் இதில் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

பொது மக்களினால் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ குண்டு வீச்சினால் சேதமடைந்துள்ள ஆலயம் பற்றிய நிலை தொடர்பான மகஜர் ஒன்றை தயாரித்து யாழ். ஆயர் மூலம் போப்பாண்டவருக்கு தெரியப்படுத்தல்.

★ சர்வமதங்களும் உள்ளடங்கிய ஆர்ப்பாட்டப் பேரணி மூலம் இம்மகஜர் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடமும், யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களிடமும் ஒப்படைக்கப்படும்.

★ இம்மகஜரின் பிரதிகள் சிறிலங்காவின் ஜனாதிபதி, மந்திரிசபை ஏனைய அரச உயர் அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல்

★ வெளிநாட்டில் வாழும் குருநகர் மக்கள் மூலம் வெளிநாட்டு அரசுகளுக்கு ஆலயச் சேதம் தொடர்பாக தெரியப்படுத்தல்.

★ ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் திருப்பலிப் பூசையை ஆலயத்தின் முன்றலில் நடாத்தல். இதற்கு உதவியாக தேவாலய முன்வளவில் பொதுமக்கள் குருநகரிலுள்ள சங்கங்கள் மூலம் திரட்டப்படும் நிதி மூலம் கொட்டில் அமைக்க நடவடிக்கை எடுத்தல்

இச்செயற்பாடுகளை நிறைவேற்ற பொது மக்களினால் நாற்பத்தைந்து பேர் கொண்ட ஆலயப் புனரமைப்புக் குழுவும் நேற்றைய தினம் நியமிக்கப்பட்டது. (17)

---

### உள்ளூராட்சி

உள்ள பதினைந்து பிரதேச சபைகள், திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பத்து பிரதேச சபைகள் என்பவற்றிற்கு உறுப்பினர்களைத்தெரிவு செய்யும் நோக்கில் இத்தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

---

### தவறாது

விலில் இன்று காலை 10 00 மணிக்கு கலந்துரையாடுவதற்கு சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

---

### அரசு

வேண்டும் இதற்காக எந்த தியாகத்திற்கும் தயார் என்றும் நெவில் பெர்னான்டோ மேலும் அறிவித்தார்.

---

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் நடாத்தப்படவுள்ள வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 30 11 93 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேற்படி போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஏற்கனவே 15 11 93 என அறிவிக்கப்பட்டிருந்தது இதுவரையும் இப்போட்டிக்கென விண்ணப்பிக்காத அனைவரும் உடனடியாக இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### முதற்கட்ட வாக்குப்பதிவு

(டில்லி)

உத்தரப் பிரதேச மாநில சட்டப்பேரவைக்கான தேர்தலில் முதற் கட்டமாக 224 தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு இன்று நடைபெறவுள்ளது இத் தொகுதிகளில் ஏராளமான சுயேட்சை வேட்பாளர்கள் உட்பட 5000க்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

## வீர அஞ்சலி

எமது கல்வி நிலையத்தில் தமிழ் ஆசிரியராக கடமை யாற்றிய திரு. ப. குழந்தைவேலு அவர்களின் அன்பு மகன்

**குழந்தைவேலு சத்தியேந்திரா**

**[2-ம் லெப்டினன்ட் சிவகுமாரன்]**

13.11 93 ல் பூநகரி முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவை தழுவிக்கொண்டார். இவருக்கும் இவருடன் வீரச்சாவடைந்தோர்க்கும் எமது வீர அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குனர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

**பாரதி கல்வி நிலையம்**
சித்தன்கேணி. (சி/7949)

## வீரச்சாவு

**லெப். ரமணன் (சிவா)**
**இவஞானம் சிவபாலன்**

பன்னாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், இடம்பெயர்ந்து தற்போது தொல்புரம் பத்தானைக் கேணியடிக்கு அருகாமையில் வசிப்பவருமான முருகையா சிவஞானம் அவர்களின் மகன் சிவபாலன் [லெப். ரமணன்] பூநகரி முகாம் தகர்ப்பில் 13. 11 93 அன்று வீரச்சாவு அடைந்து விட்டார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பத்தானைக் கேணியடி, தகவல்:
தொல்புரம், மு. சிவஞானம்
சுழிபுரம். (சி 7957) [தந்தை]

## குழந்தைவேலு சத்தியேந்திரா

**[2-ம் லெப்டினன்ட் சிவகுமாரன்]**

**[யாழ். மத்திய கல்லூரி மாணவன்]**

இவர் நாகலிங்கம் குழந்தைவேலு (தலைமைப் பீட பெரும்பாக உத்தியோகத்தர் கமநலச் சேவைத் திணைக் களம், யாழ்ப்பாணம்), திருமதி விக்னேஸ்வரி குழந்தைவேலு (ஆசிரியை, யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மகனும், சரத்சந்திரா (யாழ் மத்திய கல்லூரி மாணவன்), சமுத்திரிகா (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனுமாவார்.

இவர் பூநகரி முகாம் தகர்ப்பு நடவடிக்கையின் போது 13-11-1993 அன்று களப்பலியானார். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திரு. திருமதி. குழந்தைவேலு**

63/02, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில். (சி/ 7950)

# விமானப்படை தாக்குதல் சமயநிறுவனங்கள்கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள ஆலயங்கள் மீதும், ஆஸ்பத்திரிகள் மீதும். அரச அதிபர் அலுவலகம மீதும், பொது மக்கள் குடியிருப்புகள் மீதும் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்களை சமய நிறுவனங்கள் கண்டித்துள்ளன.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை இது தொடர்பாக கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. மேலும் இது தொடர்பான மகஜர் ஒன்றை 95க்கும் மேற்பட்ட கத்தோலிக்க மதகுருமார் ஒன்றிணைந்து தயாரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக இந்து இளைஞர் பேரவை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் "இக் கண்மூடித்தனமான தாக்குதல்களை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் வன்மையாக கண்டிக்கும் அதேவேளை சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறான கோழைத்தனமான மனிதாபிமானமற்ற செயல்களை வரும் காலத்தில் தவிர்க்கவேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் விமானக் குண்டுத் தாக்குதல்களை கண்டித்து 95 இற்கு மேற்பட்ட கிறிஸ்தவ மதகுருமார் தயாரித்து வரும் கண்டன அறிக்கை சிறிலங்கா ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

(பா).(நி).(24)

## தாதிகள் தேவை

**வில்லியம் ஹாவே**

**தனியார் மருத்துவமனை**

17, கண்டி வீதி, சுண்டிக்குளி.

எமது சத்திர சிகிச்சை கூடத்தில் கடமை புரிவதற்கு சிறந்த அனுபவமுள்ள தாதிகள் தேவை. தகைமைச் சான்றுகளுடன் விண்ணப்பம் செய்யவும்.

- நிர்வாகி

(6614)

## 7-ம் நாள் நினைவஞ்சலி



**திரு. சிவலிங்கம் துரைராசா**

## தாக்குதலைக் கண்டித்து வெகுசனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சிறிலங்கா அரச படையினரின் மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து சர்வமத ஒன்றியம், மற்றும் நற் சமூக நடு நிலையபணியகம் இணைந்து ஒரு வெகுஜனப் போராட்டத்தை நடத்த திட்டமிட்டு வருகின்றன,

கடந்த சில நாட்களாக வைத்தியசாலைகள் மீதும், ஆலயங்கள், மக்கள் குடியிருப்புகள் மீதும் சிறிலங்கா விமானப்படையின் கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுகளையும், இராணுவமுகாமில் இருந்து மக்கள் குடியிருப்புக்கள் மீதான எறிகணைத் தாக்குதல்களையும் கண்டித்து மேற்படி வெகுஜனப்போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் அங்கம் வகிக்கும் சகல மதகுருமார்களையும் சந்தித்து இதற்கான ஏற்பாடுகளை நற் சமூக நடு நிலைய பணியகம் மேற்கொண்டு வருகின்றது. (நி) (பா)

### தொண்டமனாற்றில்

# விமான தாக்குதல் பெண்மணி காயம்!

(வடமராட்சி)

தொண்டமனாறு பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்களின் பலத்த குண்டுவீச்சுக்கு இலக்காகி ஒரு குடும்பப் பெண் காயமடைந்தார். இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

தொண்டமனாறு வல்லை வீதியில் இரண்டு பொம்மர்கள் வீசிய இரண்டு குண்டுகளுக்கு அவ்விடத்தைச் சேர்ந்த செல்லையா-மகேஸ்வரி (வயது 41) என்ற குடும்பப் பெண்ணே வீதியால் சென்று கொண்டிருந்தபோது காயமடைந்தார். இவர் அயலவர்களின் உதவியுடன் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார்

அதே சமயம் சின்னக் கடற்கரைப் பகுதியிலும் இவ் விமானங்கள் வீசிய இரண்டு குண்டுகளுக்கு இரண்டு மாடுகள் இறந்தன. அப்பகுதியில் சில வீடுகள் மேலும் சேதமடைந்தன.

அக் குண்டுவீச்சு விமானங்கள் பலாலியை நோக்கிச் சென்றதையடுத்து உலங்குவானூர்தி ஒன்று அப்பகுதிக்கு சென்று வட்டமிட்டது. தொண்டமனாறு குடியிருப்புப பகுதிகள் மேலாக குண்டு வீச்சு விமானங்கள் அங்குமிங்குமாக ஓடித்திரிந்தன.

இதேவேளை நீர்வேலியில் நேற்றுக் காலை உலங்குவானூர்தி ஒன்று நடாத்திய தாக்குதலில் மூவர் சிறுகாயங்களுக்குள்ளாகினர் வீதியில் நின்ற இரு மாடுகள் இறந்தன. உலங்குவானூர்தியில் இருந்து 50 கலிபர் தாக்குதலும் கைக்குண்டு வீச்சும் மேற்கொள்ளப்பட்டது. இதில் பல மாடுகள் காயமடைந்தன.

நீர்வேலிப் பகுதியில் 15 நிமிடநேரம் உலங்குவானூர்தி தாக்குதல் நடத்தியது. மாலை கைதடியிலும், மல்லாகத்திலும் உலங்குவானூர்தி தாக்குதல் நடைபெற்றது.

(யோ)

### இராணுவத்தினரை

குழப்பங்கள் செய்யக் கூடாது அப்படிசெய்யின புலிகளுக்கே இலாபம் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்

எமது நாட்டின் பாதுகாப்பு நோக்கை ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துள்ளார். பூநகரியில் பாரிய யுத்தம் நடைபெறும் போது நாம்

## அதிகாலை ஷெல் தாக்கு

(நமது நிருபர்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் யாழ் நகர் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் வீடொன்று சேதமடைந்தது.

நேற்று அதிகாலை ஒருமணியளவில் மேற்கொள்ளப்பட்ட இச்ஷெல் தாக்குதலினால் மக்கள் பீதியடைந்தனர். இதேவேளை அரசடிப் பகுதியில் உள்ள திருமதி ஸ்ரீ ராமச்சந்திரன் என்பவரின் வீட்டின் மீது விழுந்து வெடித்த ஷெல்லினால் அறை ஒன்று முற்றாகச் சேதமடைந்தது.

இதேவேளை மற்றொரு ஷெல் அரசடிப் பகுதியில் இ. கனகலிங்கம் என்பவரின் வீட்டின் பின் பகுதியில் வீழ்ந்து வெடித்தது. (சி)

## கிளாலிப் பகுதியிலும் குண்டுவீச்சுத் தாக்குதல்


(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான 'புக்காரா' உலங்குவானூர்தி விமானங்கள் நேற்றுக் காலை 10-30 மணியளவில் கிளாலி, அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலையும், 50 கலிபர் தாக்குதலையும் நடத்தின.

இவ்விமானங்கள் பலாலிப் பகுதியில் இருந்து திடீரென வந்து கடல் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் தாக்குதலை நடத்தின. எனினும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை, இத்தாக்குதலில் கிளாலியில் குடிமனைகள் சில நாசமாகின

(86)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



[2-ம் லெப்டினன்ட் சிவகுமாரன்]

[யாழ். மத்திய கல்லூரி மாணவன்]

இவர் நாகலிங்கம் குழந்தைவேலு (தலைமைப் பீட பெரும்பாக உத்தியோகத்தர் கமநலச் சேவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), திருமதி விக்னேஸ்வரி குழந்தைவேலு (ஆசிரியை, யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மகனும், சரத்சந்திரா (யாழ் மத்திய கல்லூரி மாணவன்), சமுத்திரிகா (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனுமாவார்.

இவர் பூநகரி முகாம் தகர்ப்பு நடவடிக்கையின் போது 13-11-1993 அன்று களப்பலியானார். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**திரு. திருமதி. குழந்தைவேலு**

63/02, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில். (சி/ 7950)

---

# கப்டன் மயூரன்

# தியாகராஜா - பாலசபாபதி

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரும், பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான தியாகராஜா பாலசபாபதி (மயூரன்) 11-11-93 அன்று பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்தார்.

இவர் திரு. தியாகராஜா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்பு மகனும், பிறேமராஜன் (ஆசிரியர்), சந்திரவதனா (ஜேர்மன்), பார்த்திபராஜன் (ஜேர்மன்), சந்திரகுமாரி (U.K.) சந்திரபிரபா (பரு. ப. நோ. கூ. சங்கம்), பரதராஜன் (வீரச்சாவடைந்த முன்னாள் பருத்தித்துறை பொறுப்பாளர்), குமாரி பாமா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சுந்தரி வாசா"
ஆத்தியடி,
பருத்தித்துறை. (6624)

தகவல்:
ச. தியாகராஜா
(தகப்பன்)

---

# லெப். அழகநம்பி (றோமியோ)

[கொண்டுரெட்டி செந்தில்நாதன்]


இவர் கொண்டுரெட்டி - ஐயம்மா அவர்களின் அன்பு மகனும் காந்திமதி [சுவிஸ்], இந்துமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாபு[சுவிஸ்]. அவர்களின் அன்பு மைத்துனரும் அரோன் [சுவிஸ்] அஜிதா [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இவர் 13 - 11 - 93 அன்று பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

கொண்டுரெட்டி (A K சாமி)
கிருஷ்ணா ஸ்டோர்ஸ்,
605, K. K. S வீதி,
யாழ்ப்பாணம்.

48/3, கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (66 1)

---

# 7-ம் நாள் நினைவஞ்சலி



# திரு. சிவலிங்கம் துரைராசா

(இளைப்பாறிய சுங்க அத்தியட்சகர்)

*மலர்வு:* 11-09-1932

*உதிர்வு:* 12-11-1993

சங்கானை வடக்கு பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்ட திரு. சிவலிங்கம் துரைராசா 12-11 93-ல் கொழும்பில் காலமானார். இவர் சிவலிங்கம்-பார்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், பஞ்சேந்திரத்தின் அன்புக் கணவரும், நடராசா, இராசரத்தினம், அழகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னபூரணி, ஜெகதீஸ்வரி, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், மலர்விழி, கயல்விழி, நிலவொளி- காந்தன், கலையரசி, எழிலரசி, சிவறஞ்சன், சிவரூபன், சிவமோகன், சிவமாலினி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பம்பலப்பிட்டி அவரது இல்லத்தில் 14-11-93 ல் நடை பெற்றது. இன்று 18 11-93ல் அவரது இல்லத்தில் ஆத்ம சாந்திக்கிரியைகள் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:

மங்களா ஸ்ரோர்ஸ்,
பண்டத்தரிப்பு. (6623)

துரை சகோதரர்கள்

---

# கண்ணீரே...

# 2ஆம் லெப். சிவகுமாரன்

(குழந்தைவேலு சத்தியேந்திரா)

**பூநகரித் தவளைத் தாக்குதலில் 13.11-93இல் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட, விக்னேஸ்வரி (எமது ஆசிரியை) குழந்தைவேலு தம்பதியின் இளவல் சத்தியேந்திரா அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கை**

அதிபர், ஆசிரியர்,
மாணாக்கர்.

யாழ் பெரியபுலம் ம. வி.,
வேலணை சரஸ்வதி வித்தியாலயம். (6618)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

யுடன் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

அதே சமயம் சின்னக் கடற்கரைப் பகுதியிலும் இவ் விமானங்கள் வீசிய இரண்டு குண்டுகளுக்கு இரண்டு மாடுகள் இறந்தன. அப்பகுதியில் சில வீடுகள் மேலும் சேதமடைந்தன.

அக் குண்டுவீச்சு விமானங்கள் பலாலியை நோக்கிச் சென்றதையடுத்து உலங்குவானூர்தி ஒன்று அப்பகுதிக்கு

---

## இராணுவத்தினரை

குழப்பங்கள் செய்யக் கூடாது அப்படிசெய்யின புலிகளுக்கே இலாபம் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்

எமது நாட்டின் பாதுகாப்பு நோக்கை ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துள்ளார். பூநகரியில் பாரிய யுத்தம் நடைபெறும் போது நாம் இங்கு கூடியுள்ளோம். பிரபாகரனின் தலைவாசலிலேயே பூநகரி முகாம் உள்ளது. இதற்கு அப்பால் யாழ்ப்பாணம் உள்ளது. அடிக்கடி பூநகரி முகாம்கள் தாக்கப்பட்டு வந்துள்ளன.

படையினரின் இழப்புவிபரங்களை சில தினங்களில் அறிவிக்க முடியும். புலிகளிற்கும் இந்நடவடிக்கையில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. நாம் எமது பேச்சாலும் செயலாலும் படையினரை ஊக்குவிக்க வேண்டும். அவர்களின் ஊக்கத்தை குலைக்கக் கூடாது. இராணுவம் திறமையாக செயற்பட்டுள்ளது. எமது படையினர் பயந்து ஓடுபவர்களல்ல வெற்றிதோல்வியை சமாளித்து செயற்படக்கூடியவர்கள். குறைபாடுகள் இருப்பதால் எமது படையினர் பின்வாங்கமாட்டார்கள். கடந்த 10 ஆண்டுகளில் யுத்த முனையில் எமது படையினர் நல்ல அனுபவம் பெற்றுள்ளனர். இறந்த படையினருக்கு அனுதாபம் தெரிவிக்கிறேன். ஏனையபடையினருக்கு பாராட்டு தெரிவிக்கின்றேன். அமைதியாக இருந்து இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டின் இன்றைய பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண நாம் விருப்புடன் உள்ளோம். ஆனால் ஒரு தரப்பினால் மட்டும் பேச்சு நடத்த முடியாது. பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மற்றைய தரப்பும் பேச்சில் கலந்து கொள்வது முக்கியம். இன்றைய பிரச்சினை நீடித்தால் முழு நாட்டிற்கும் பாதிப்பு. எனவே இந்த முக்கியமான வேளையில் நாம் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும் இது ஐ. தே. கவிற்கு மட்டுமான பிரச்சினையல்ல முழுநாட்டினதும் பிரச்சினை. இதை எதிர்க்கட்சித் தலைவியும் உணர வேண்டும் எனவும் பிரதமர் கூறினார்,

---

தாக்குதல் நடத்தியது. மாலை கைதடியிலும், மல்லாகத்திலும் உலங்குவானூர்தி தாக்குதல் நடைபெற்றது. (யோ)

இதேவேளை மற்றொரு ஷெல் அரசடிப் பகுதியில் இ. கனகலிங்கம் என்பவரின் வீட்டின் பின் பகுதியில் வீழ்ந்து வெடித்தது. (சி)

# கிளாலிப் பகுதியிலும் குண்டுவீச்சுத் தாக்குதல்

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான 'புக்காரா' உலங்குவானூர்தி விமானங்கள் நேற்றுக் காலை 10-30 மணியளவில் கிளாலி, அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலையும், 50 கலிபர் தாக்குதலையும் நடத்தின.

இவ்விமானங்கள் பலாலிப் பகுதியில் இருந்து திடீரென வந்து கடல் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் தாக்குதலை நடத்தின. எனினும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை, இத்தாக்குதலில் கிளாலியில் குடிமனைகள் சில நாசமாகின (86)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

# வள்ளியம்மை காசிப்பிள்ளை

**தோற்றம்:-** 7- 2- 1922

**மறைவு:-** 29- 11- 1992

*திதி 18 11. 93*

பாசமுடன் எம்மை பாங்குடனே வளர்த்து
பண்பு மிகு தழைத்தோங்க காத்திரே
ஏற்றமோடு நாமினிது வாழ இப்புவியில் வித்திட்டு
மின்னலென எமைவிட்டு மறைந்தாயே
எங்கள் துயர்களையும தாயே
தங்கள் முகமதியில் எமை மறப்போம்
தவழ்ந்து வரும் புன்னகை புதைந்து விட்டதே
அம்மா வேண்டுகிறோம் இறைவனை
தங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்.

அன்பின்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

2-ம் வட்டாரம்
புங்குடுதீவு (6619)